**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

M.P.No. 3/2025

in

C.C. No. 572/2025

**கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.186/2022**

**பிரிவு 379 IPC**

**உத்தரவு நாள்: 26.11.2025**

கருப்பசாமி,

த/பெ.முருகன்

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,

கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்

குற்ற எண்.186/2022

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 21.11.2025, மனு 437 சி.ஆர்.பி.சி.**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 17.11.2025 முதல் பிடியாணை மூலம் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 186/2022 பிரிவு 379 IPC (Sand theft) வழக்கில் NBW நிறைவேற்றி சிறையில் உள்ளார் என்றும், மேற்படி எதிரியை பிணையில்

விடும்பட்சத்தில் இதுபோன்ற குற்றச் செயல்களில் மீண்டும் ஈடுபடக்கூடும் என்பதாலும், மேற்படி எதிரி கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 252/2024 இ.த.ச. பிரிவு 452, 5(i) (2), 5(i) (6) POCSO Act வழக்கில் தண்டனைக் கைதியாக பாளையங்கோட்டை, மத்திய சிறையில் இருந்து வருகிறார் என்றும், எனவே, மேற்படி எதிரியை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்/எதிரியானவர் 10 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுவிட்டதைக் கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார் என்று கருதியும், மேலும், எதிரியை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று கருதியும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரியை பிணையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

நிபந்தனைகள் :-

1. மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/-த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட இரு நபர்களுள் ஒருவரேனும் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நிரந்தர வசிப்பிடம் கொண்டவராக இருக்க வேண்டும்.

2. மனுதாரர் / எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2025.11.26 17:30:43 +0300

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),

சங்கரன்கோவில்.